படும்போது. திருத்துறைப்பூண்டி கால்நடை மருந்தகத்தையும் கால்நடை மருத்துவமனையாக உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 533, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர்.

533—

மொடக்குறிச்சியில் மஞ்சள் அரவை ஆலை அமைத்தல்.

*3360—திருமதி கவிநிலவு தர்மராஜ் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மஞ்சள் உற்பத்தி அதிகமுள்ள மொடக்குறிச்சியில் ஒரு மஞ்சள் அரவை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது,

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்து நடை செந்தமிழ் நாட்டில் சிங்க நடை போட்டு மங்களச் சின்னமாம் மஞ்சள் மகிமையால் தமிழகம் எங்கும் மொடக்குறிச்சி மாநகர் தமிழகத்திற்கு பெயர் சேர்த்துக்கொண்டிருக்கிற சூழ்நிலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது இந்தத் திட்டம் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள்.

1992 ஏப்ரல் 9]

மொடக்குறிச்சியிலே விளையக்கூடிய மஞ்சளுக்கு மொரீசியஸ் நாட்டுக்காரர் விலை நிர்ணயிக்கக்கூடிய இழிநிலை இருக்கிறது, எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றல் பெற்ற. நடமாடும் தெய்வம், இதய தெய்வம். புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே .. மொடக்குறிச்சி மாநகர மக்கள் ஆலை என்பதை ஆல்பத்திலும். தொழிற்சாலை என்பதைத் தொலைக்காட்சியிலுமே கண்டு கொண்டிருக்கிறார்கள், எனவே ஓர் ஆங்கில ஏடு சொன்னது போல — ''Dr. Puratchi Thalaivi, she is not a woman, above the woman, above the law, above the family, she is great என்று சொல்லியிருக்கிறார்கள். எதையும் சாதிக்கக்கூடிய. சரித்திர சகாப்தம் படைக்கக்கூடிய அந்தத் தானைத் தலைவருடைய பொன்னான ஆட்சியிலே, வருகின்ற ஆண்டிலாவது எங்கள் மொடக்குறிச்சி மாநகரிலே மஞ்சள் அரவை ஆலையை அமைக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மஞ்சளைப் பொறுத்த அளவில். உணவுப் பொருளாக இருந்தாலும் சரி. நறுமணப் பொருளாக இருந்தாலும் சரி. அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மையே, தூள் தயாரிக்கும் இயந்திரங்களைக் கொண்டு அரைக்கும் ஆலைகள் எதுவாக இருந்தாலும் மஞ்சள் தூள் தயாரிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது, எனவே இது சிறு தொழில் பிரிவின் கீழ் வருவதால் ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் முன் வந்தால் அரசு ஊக்குவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

514—

நத்தம் தாலுக்காவில் முன்சீப் கோர்ட் அமைத்தல்,

*5623—திரு, மெ. ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நத்தம் நகரம் தாலுக்காவில் தலைநகரமாகவும் உள்ளதால் அங்கு முன்சீப் கோர்ட் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நத்தம் நகரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.